# 'ரௌத்திரம் பழகு'

(நாடகங்கள்)

1141!!
HU1

மு. இராமசுவாமி

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
41-B, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை- 600 098.
☎: 26241288, 26251968, 26258410

# முதன்மைப் பாடம் தாள் - 1

## இக்கால இலக்கியம்

(கவிதை, உரைநடை, சிறுகதை, நாடகம், புதினம்)

பருவம் : I

நோக்கம் : இக்காலக் கவிஞர்களின் சமூகப் பொறுப்பும் உணர்வும், இலக்கிய நயமும் மிகுந்த படைப்புகளை அறிமுகப்படுத்துதல்.

பயன் : சமூக உணர்வூட்டும் படைப்புகளை மாணவிகள் அறிதல்.

அலகு: 1

1. பாரதியார் பாடல்கள் - குயில் பாட்டு
2. பாரதிதாசன் - புரட்சிக்கவி
3. கவிக்கோ அப்துல் ரகுமான் - நேயர் விருப்பம்

அலகு: 2

திரு.வி.க. - பெண்ணின் பெருமை

அலகு: 3

சிறுகதை – 10

1. கறுப்புரயில் - கோணங்கி
2. காசி - பாதசாரி
3. சிறுமி கொண்டு வந்த மலர் - விமலாதித்த மாமல்லன்
4. ஒரு திருணையின் பூர்வீகம் - சுயம்புலிங்கன்
5. பூனைகள் இல்லாத வீடுகள் - சந்திரா
6. வனம்மாள் - அழகிய பெரியவன்
7. மரி எனும் ஆட்டுக்குட்டி - பிரபஞ்சன்
8. இந்நாட்டு மன்னர்கள் - நாஞ்சில் நாடன்
9. அம்மா ஒரு கொலை செய்தாள்- அம்பை
10. காட்டிலே ஒரு மான் - அம்பை

அலகு: 4

நாடகம் - ரௌத்திரம் பழகு – மு. இராமசுவாமி(சமூகநாடகம்)

அலகு: 5

புதினம் - தகனம் - ஆண்டாள் பிரியதர்ஷினி.

காட்சி 1

நடப்பு

*(ஒரு நடுத்தரவர்க்க வீட்டின் வரவேற்பறை. அப்பா நாற்காலியிலும் பாட்டி தரையிலும் அமர்ந்து தொலைக் காட்சி பார்த்துக்கொண்டிருக்கின்றனர். அம்மா, கொஞ்சம் தள்ளி அமர்ந்து தொலைக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்.)*

அப்பா : மீனா! காப்பிக் கொண்டுவா!

அம்மா : கைகால் அப்படி அசருதேன்னு... கொஞ்சம் 'சீரியல்' பாக்கலாம்னு உக்காந்தா ...ஒங்களுக்குப் பொறுக்காது. நேத்து சீரியல்லெ, 'மகா' கோவிச்சிட்டு வீட்டெவிட்டே போறேன்னு சொன்னதுலேர்ந்து எனக்குக் கையும் ஓடலெ... காலும் ஓடலெ!... இப்படிப் பண்ணுவானா எந்த வீட்டுக்காரனும்?

அப்பா : சரிசரி... கதெயிலெ வர்ற 'மகா'வெ நெனச்சி நீ படுத்துக்கிடாதெ! ஒம் மகா 'பாரதி' பாத்தான்னா கத்தப் போறா! போதாததுக்கு இன்னும் நாலு உசுருங்க ஒஞ் சாப்பாட்டெ நம்பிக் கெடக்குதுங்க.... நா வேண்ணா சேனலெ மாத்திருதேன்...

அம்மா : ஏய் பாரதி!

*(தொலைக்காட்சியில் 'பொம்பளெ சிரிச்சாப் போச்சி, பொகையிலெ விரிச்சாப் போச்சி' பாடல் ஓடிக் கொண்டிருக்கிறது. ரிமோட் அப்பாவின் கையிலிருக் கிறது. பாடலைக் கேட்டு, அறையிலிருந்து வெளியே வருகிறாள் மகள் பாரதி)*

பாரதி : *(எரிச்சலுடன்)* மொதல்ல பாட்டெ மாத்துங்கப்பா! இந்தச் சினிமாக்காரங்களுக்கு வேறெ வேலெயே

இல்லெ. எப்பவும் பொண்ணுங்களெ மட்டந்தட்ற தையே வேலையா வச்சிருக்காங்க.

*(அடுக்களைக்குள் நுழைகிறாள் பாரதி! ரிமோட் மூலம் சானலை உடனே மாற்றுகிறார். அப்பா! மாற்றிய சேனலில் 'அதிகமா ஆசெப்படுற ஆம்பளையும் அதிகமாக் கோபப்படுற பொம்பளெயும் நல்லா வாழ்ந்ததா சரித்திரமே இல்லெ' என்று வசனம் ஓடிக்கொண்டிருக்கிறது. என்ன செய்வது என்று தெரியாமல் மிரண்டு அப்பாவும் பாட்டியும் சிரிப்பை அடக்கிக் கொள்கின்றனர்.)*

பாரதி : மொதல்லெ, டி.வியெ நிறுத்துங்கப்பா!

அப்பா : நா ஒண்ணும் பண்ணலம்மா... எந்தச் சேனலெ மாத்துனாலும்...

பாரதி : சேனலெ நடத்றவன் புத்தியெத்தான் மாத்தணும். டி.வி.யெவே ஆஃப் பண்ணுங்கப்பா!... பொண்ணுங் களெ மனுசியாவே மதிக்காத ஜென்மங்க.. என்னமோ பொண்ணுங்களுக்கு மட்டுந்தான் கோவமே வர்றது மாதிரி..

அப்பா : சரிம்மா... ஆஃப் பண்ணிட்டேன். நீ மொதல்ல ஒங் கோபத்தெ வுடு.

பாரதி : இது வெறுங்கோபம் இல்லப்பா... சுத்தி நடக்குறதெப் பாத்து வர்ற சத்திய ஆவேசம்! கண்ணகி, பாண்டியன் நெடுஞ்செழியனெப் பாத்துத் 'தேரா மன்னா'ன்னு சொன்னது வெத்துக் கோபமில்லெ. அதுவும் இதே மாதிரியான சத்திய ஆவேசந்தான்!.. அதெ வெத்துக் கோபமா நீங்க எல்லாம் காட்டப் பாக்குறீங்க... *(சலிப்புடன்)* ஆம்பளைங்க எல்லாம் ஒரே மாதிரியாத்தான் யோசிக்கிறீங்க...

அம்மா : என்னடி... ஆம்பளெ கிம்பளென்னு பேசிக்கிட்ருக்க... அப்பாவெ எதுத்துப் பேசாதெ. போற எடத்லெயும் இந்த வாய்தான் வரும்...



பாட்டி : இப்படியே பேசிக்கிட்டு இருந்தா.. பு... போற அன்னைக்கு இருந்திட்டுப் பொ... அன்னக்கித் திரும்பி வரவேண்டியதுதா...

பாரதி : பாட்டி! ஒங்களுக்குத் தெரியாது... வேறெ!

அம்மா : ஏய்! சும்மாயிருக்கமாட்டெ... இ... புள்ளைங்களெப் பெத்து வளத்து ஆ... அவுங்களுக்குத் தெரியாதா, எது... கெட்டதுன்னு?

பாரதி : பொம்பளெ கோபப்படக்கூடாது; பொ... சிரிக்கக் கூடாது; பொம்பளெ சத்தமா... கூடாது; மொத்தத்லெ பொம்பளெக்கு ம... இருக்கக்கூடாது... அப்படித்தானே?

அப்பா : அப்படில்லாஞ்... சொல்லலெம்மா.. ஆனா.. ... நாலுபேரு...

பாரதி : யாருப்பா அந்த நாலுபேரு?... நம்மக் க... நஷ்டத்லெ கூடயிருந்தவுங்களா? மொகம் தெரி... அந்த நாலு பேருக்காக நா மொகமே இ... சடமா வாழணுமா? அப்புறம் எனக்கெதுக்... பாரதின்னு பேருவச்சீங்க?

அப்பா : யம்மா! இப்டீல்லாங் கேள்வி கேட்பேன்னு ... ஒனக்குப் பாரதின்னு பேரு வைக்கல... எங்கொள்ளுத் தாத்தா பேரு பாலகிரு... அதுலெ மொத எழுத்து 'பா'. எந் தாத்தா ... ரத்தினவேலு! அதுலெ மொத எழுத்து 'ர'. ... அப்பா பேரு திருமலை! அதுலெ மொத எழு... 'தி'. இப்படித்தாம்மா எங்க குடும்ப அடை... ஒனக்குப் பாரதின்னு பேருவச்சேன்.

பாரதி : ஒரு பெண் பிள்ளைக்குப் பேரு வைக்றதுக்கு ... தலமொற ஆம்ளைங்க பேருலெ இருக்ற ... எழுத்துதான் தேவெப்படுது ஒங்களுக்கு! அது... அம்மா தலமொறையெ ரொம்பச் சுல... அம்போன்னு விட்டுட்டீங்க. எல்லாருமே ஆம்பி... யாத்தான் இருக்கீங்க!

அப்பா : அப்படீல்லாம் இல்லம்மா....

பாரதி : நீங்க என்னத்தெ நெனச்சி எதெதெதக் கலந்து எனக்குப் பேரு வச்சீங்கன்னு எனக்குத் தெரியாது. ஆனா எனக்குள்ள அந்த முண்டாசுக் கவி பாரதிதான் நெறஞ்சி நிக்குறாரு. *(அறையிலிருந்து பாரதியின் தம்பி கையில் ஒரு நோட்டுடன் உள்ளே வருகிறான்.)*

தம்பி : அம்மா! பாரும்மா... அக்கா எழுதியிருக்ற கவிதெயெ!

*(அம்மா அதைக் கேட்க, தம்பி அந்த நோட்டைக் கொடுக்காமல், தான் வாசிப்பதாய் மல்லுக்கட்டு கிறான். பாட்டி, அவனை அழைத்துக் கவிதையை வாசிக்கச் சொல்கிறாள். அவன் கவிதையை வாசிக்கிறான்.)*

'எனக்கடுத்து உலகத்தைப் பார்த்தவனை
எனக்குத் துணையாக அனுப்பும்போதுதான்
உணர்ந்தேன்..........
நான் பெண் என்று!'

அம்மா : ஒண்ட்ட எல்லாம் வாயெக் குடுத்து மீளமுடியாது. படிக்க வச்சதுக்கு, நீ வக்கணையாப் பேச மட்டும் தெரிஞ்சிருக்றெ! சாண் பிள்ளைன்னாலும் அவென் ஆம்புள்ளே!

பாட்டி : பொண்ணுங்றவா பொடவெ மாதிரி... முள்ளுலெ விழுந்தாலும்...

பாரதி : முள்ளுலெ விழுந்தாலும்?....இதெத் தவிர வேற பதில் ஒங்ககிட்டயிருந்து வராதுன்னு எனக்குத் தெரியும்! பொண்ணெப் பொடவெயாப் பாக்காதீங்க, மனுசியாப் பாருங்கன்னு சொல்றேன்!....வர்ற வெள்ளிக்கெழமெ நாங்க போடுற வீதி நாடகத்லெ இந்தக் கவிதெ வருது. நாடகம் பாக்க வர்ற எல்லார் கிட்டயும் இந்தக் கேள்வியெ நாங்க வைக்கத்தான் போறோம்!



அப்பா : நமக்கெதுக்கும்மா நாடகம் கீடகம்னுட்டு... நம்ம வேலெயெப் பாத்துகிட்டு இருந்தாப் போதாதா?

பாரதி : பதில் எதுவும் இல்லேன்னா, எல்லாரும் சொல்றது தாம்ப்பா இந்த 'வேலெயெப் பாத்துகிட்டு இருந்தாப் போதாதா'ங்றது! இதுவும் வேலெதாம்ப்பா!... சமூக ஊழியம்!

அம்மா : சாத்தான் ஊழியம்... நாஞ் சொல்றேன்... நமக்கு நாடகமெல்லாம் வேண்டாம்... சமூக ஊழியம்லாம் கெடக்கட்டும்டி... மொதல்ல நாலு காசு சம்பாதிக்ற ஊதியத்தெப் பாரு...

பாரதி : நாடகங்றதே ஒரு கல்விதான்; அறிவு. அதெ வேண்டாம்னு சொன்னா, என்னெயெ ஏன் படிக்கவச்சே!. பொண்ணாப் பொறந்தவா போராட வேண்டிய காலம் இதுன்னு சொல்றதுக்கு, உனக்கும் சேத்துத்தாம்மா நாங்க நாடகம் போடறோம்...

*(எல்லோரும் வெளியேறுகின்றனர்.)*

## காட்சி 2 — ஒத்திகை

*(வீதிநாடக ஒத்திகைக்கான மும்முரத்தில் அனைவரும் இருக்கின்றனர். கொஞ்சம் இரைச்சலாக அந்த இடம் இருக்கிறது. பாரதி உள்நுழைகிறாள்.)*

பாரதி : சைலென்ஸ்! சும்மா அரட்டெ அடிச்சிகிட்ருக்க நாம இங்கெ வரலெ.

தேன் : இல்லெ பாரதி.....

பாரதி : அதுக்கு நீங்க வீட்லெயே டி.வியோட குப்பெ கொட்டிக் கிட்டு இருந்திருக்கலாம்.

சுந்தரி : என்ன பாரதி.. இப்படிப் பேசறெ?

பாரதி : நமக்கெல்லாம் ஒரு பொறுப்பு இருக்றதுனாலெத்தான் இங்கெக் கூடியிருக்றோம். விழிப்புணர்வு நாடகம்

போட வந்திருக்ற நம்ம கிட்டெயே விழிப்புணர்வு இல்லேன்னா எப்படி?

மாலதி : சாரி பாரதி! நாங்கெல்லாம் பொறுப்பா நாடக வசனத்தெதான் பேசிக்கிட்டு இருக்கோம். நீதான் லேட்டா வந்திட்டு யாரு மேலெயோ உள்ள கோபத்தை எங்கெ மேலே கொட்டிக்கிட்ருக்க!

பாரதி : மன்னிச்சிருங்கப்பா... வீட்லெ நாங் கொஞ்சம் 'மூட் அவுட்' ஆயிட்டேன். அந்தக் கோபத்லெ அப்படியே கொட்டிட்டேன்... தப்பு எம்மேலெதான்! சரி... ஒத்திகையெப் பாக்கலாமா?

குழுவினர் : ம். பாக்கலாம்.... பாக்கலாம்!

பாரதி : அதெ நல்லாத்தான் உற்சாகமாச் சொல்லுங்கப்பா!

குழுவினர் : ம்ம்ம்ம்... ஒத்திகையெப் பாக்கலாம்!

பாரதி : மொதல்லெ...தேனு! அந்தக் கும்மிப் பாட்டெப் பாடு...

தேன்மொழி: எல்லாரும் பாடுறதுதானே?.......ஏய் செபா, பாக்யா, தீபி, சர்மி எல்லாரும் இங்கெ வாங்கப்பா! *(பாடுவதற்கான முயற்சிகளைச் செய்கின்றனர். பின் பாடுகின்றனர்.)*

பாடல் : 'கும்மியடி தமிழ்நாடு முழுவதுங்
குலுங்கிடக்கை கொட்டிக் கும்மியடி
நம்மைப் பிடித்த பிசாசுகள் போயின
நன்மை கண்டோமென்று கும்மியடி'....

*(பாடலைத் தொடர்ந்து பெண்கள் ஆடிக்கொண்டு வருகின்றனர். பாடல் தொடர்கிறது.)*

'ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்
றெண்ணி யிருந்தவர் மாய்ந்து விட்டார்
வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போமென்ற
விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்'

*(ஆடியபடியே பெண்கள் சென்று ஒரு பிரசவ மருத்துவமனையைக் காட்சிப்படுத்துகின்றனர். உறவினர்களும் மருத்துவச் சிப்பந்திகளும் ப... அலைந்து கொண்டிருக்கின்றனர்.)*

பாட்டி : ஏங்க... இந்த மருந்தெல்லாம் ஒடனே வெ... வாங்கிட்டு வந்திருங்க...'

அப்பா : அப்பா! நான் போய் வாங்கி வாரேன்.. நீங்க இ... இருங்கெ!

தாத்தா : இல்லெ... நான் வாங்கிட்டு வந்திடறேன்... நீ ... பாத்துக்க!

*(தாத்தா மருந்து வாங்க வெளியேறுகிறார். ம... உள்ளே வருகிறார்.)*

அப்பா : டாக்டரம்மா... இன்னக்கி வெள்ளிக்... 9-10.30 நல்லநேரம். அதுக்குள்ளெ பிர... முடிஞ்சா...

மருத்துவர் : எங் கைலையா இருக்கு... வலி வந்தா பாக்கலா... இல்லெ... நேரந்தான் முக்கியம்னா சிசேரி... பண்ணித்தான் எடுக்கணும்...

*(மருத்துவர் உள்ளே செல்கிறார். மருத்துவர் பே... வசனத்தை எப்படிப் பேசலாம் என்று பா... சொல்லிக் கொடுத்து, உள்ளே நுழைகிற அ... பாணியையும் மாற்றியபடி, நடந்து போ... சொல்கிறார் பாரதி! மருத்துவரும் அந்தப்ப... உள்ளே போகிறார். தலையை வெளியே நீட்டி... 'செய்தது சரியா' என்று கேட்டு உள்ளே செல்... தொடர்ந்து, மருத்துவர் உள்ளேயிருந்து வெளியே...*

மருத்துவர் : மகாலட்சுமி பொறந்திருக்கா!

அப்பா : பொட்டப் புள்ளையா!

மருத்துவர் : எந்தப் புள்ளெயா இருந்தா என்ன? அது ... புள்ளெதானெ!

*(மருத்துவர் வெளியேற, தாத்தா உள்ளே நுழை...*

தாத்தா : என்ன புள்ளெப்பா?

அப்பா : பொட்டப் புள்ளையாம்!

தாத்தா : பொட்டப் புள்ளையா?

*(பொட்டப் புள்ளெ... பொட்டப் புள்ளெ... பொட்டப் புள்ளெ என்று பல திக்குகளிலிருந்தும் சத்தங்கள் வருகின்றன.)*

பாரதி : நிறுத்துங்க... என்ன, பொட்டப் புள்ளெ... பொட்டப் புள்ளென்னு பொட்டுக்கடலெவிக்கிற மாதிரி சொல்லிக்கிட்டிருக்கீங்க... அதெக் கொஞ்சம் தெளிவா, மத்தவுங்களுக்கு எரக்கம் வர்ற மாதிரி சொல்லக்கூடாதா?

அனைவரும்: பொட்டப் புள்ளெயா... பொட்டப் புள்ளெயா...

*(அதைத் தொடர்ந்து, அரங்கக் காட்சியாகி நிற்போரும் மற்றையோரும் சோகமாகப் பாடியபடியே நகர்கின்றனர்.)*

பாடல் : பெண்ணென்றால் பேயுமிங்கு இரங்கும் என்பார்
இங்குள்ள மனிதர் மட்டும் இரங்கக் காணோமே!
கண்ணுள்ள புனிதர் எல்லாம் எங்கே போனாரோ?
மண்ணில் இந்தக் கொடுமை என்று தீருமோ?

பாரதி : நல்லாருக்குது... அப்படியே அடுத்தடுத்த வரிகளைப் பார்வையாளருக்குள்ள போயி அவுங்களுக்குள்ளயிருந்து பாடுனா எப்படியிருக்கும்னு பாக்கலாம்.. சரியா?

பாடுவோர்: சரி பாரதி!

பாடல் : பொட்டப்புள்ள என்று சொன்னால் கெட்ட பிள்ளையா
மட்டந்தட்ட நாங்களென்ன மாட்டு சென்மமா?
மனசுள்ள நீங்களெல்லாம் செவிட்டு சென்மமா?
பதில் சொல்லுங்கள்... பட்டமரம் துளிர்ப்பதற்கு வழி சொல்லுங்கள்!

பாரதி : சூப்பர்! சரி... அடுத்து...



பாத்திமா : பாரதி அக்கா! எங் காட்சியிலெ கடைசி வசனமா... 'எட்டாங் கிளாஸ் வரைக்கும் படிச்சிட்டாள்ல...' அது போதும்னு இவுங்க சொல்ல,.. தண்ணி ஊத்துனதுக்கு அப்புறமா, ஒரு நல்ல நாளாப் பாத்து எம் பையனுக்குப் பேசி முடிச்சிடலாம்னு அவுங்க சொல்ல, நான் சோகத்தோட புத்தகப் பையெ மட்டும் பாத்தாப் போதுந்தானே?

பாரதி : போதும்... அதெ அந்தக் காட்சி வரும்போது பாக்கலாம்... அதுக்கு முன்னால... அந்த வரதட்சணெக் காட்சியெ ஒரு தடவெப் பாத்திருவோமா?... யார் யார் அந்தக் காட்சியிலெ இருக்கா... வாங்க!

*(பெண்பார்க்கும் காட்சி நடைபெறுகிறது. மாப்பிள்ளைப் பையன், தன் நண்பர்களுடன் நாற்காலியில் அமர்ந்திருக்கிறான். எதிர்ப்பக்கத்தில் ஆண்கள் எல்லோரும் நாற்காலியில் அமர்ந்திருக்கின்றனர். பெண்கள் கீழே விரிப்பில் அமர்ந்திருக்கின்றனர். பெண், தலையைக் குனிந்தபடி, காப்பியைக் கொண்டுவந்து கொடுத்துச் செல்கிறார். மாப்பிள்ளையின் அப்பா, 'ஆஃபீஸ் எங்கம்மா இருக்கு?' என்று கேட்க, பெண், தான் வேலை பார்க்கும் அலுவலகத்தைச் சொல்லுகிறாள்.)*

பெரியவர் : ரொம்ப சந்தோசம்... பொண்ணெ எங்களுக்கு ரொம்பப் புடிச்சிருக்கு... இனி... பேச வேண்டியதெப் பேசிறலாமே!

பெண்ணின் அப்பா: ஒரே பொண்ணுதான். எங்களுக்குப் பெறகு எல்லாமே அவளுக்குத்தான். நூறு பவுன் நகெ போடுறேன். கல்யாணச் செலவெ நான் பாத்துக்கிறேன்... வேற என்னன்னு நீங்கதான் சொல்லணும்..

*(மாப்பிள்ளையின் அம்மா, தன் கணவனின் காதைக் கடித்தபடி இருப்பதைப் பார்த்து)*

பண்ணனும்... எனக்கு இது ஒரு பம்பர் ஆஃபர்! அதுக்கு நான் ஒண்ட்ட ஹம்பர் கேக்கலே... சம்மர் பிரீஸா கொஞ்ச நேரம் எனக்குக் கம்பெனி குடுக்கச் சொல்றேன்...

ஜீவா : சார்... நீங்க பேசுறது சரியில்ல...

அதிகாரி : கூல் ஜீவா கூல்! இட்ஸ் ஆல் இன் தி கேம்!

ஜீவா : எதுடா கேம்?.... நீ என்ட்ட வெளயாடுறதா?

*(பாரதி, அதே வசனத்தை ஆக்ரோஷத்துடன் பேசி, அந்த அதிகாரியைக் கீழே தள்ளுவதைச் செய்து காட்டி, அதை மறுபடியும் செய்து காட்டச் சொல்கிறார்.)*

ஜீவா : ஒனக்கு அக்கா தங்கச்சியே கெடையாதா? டேய்! நான் பொண்ணா இருந்ததுனாலெ நீ பேசிட்டே! நான் பேயா மார்றதுக்கு முந்தி ஒடீரு. இந்தாடா ஒம் ப்ராஜெக்ட்!

*(தூக்கி அதிகாரியின் முகத்தில் எறிந்துவிட்டு வெளியேறுகிறார் ஜீவா.)*

பாடல் : ரௌத்திரம் பழகு! பெண்ணே நீ ரௌத்திரம் பழகு!

பௌத்திரம் காக்க, பெண்ணே நீ ரௌத்திரம்பழகு!

கோபப்படு! கோபப்படு! கோபப்படு!

சமுகத்தின் சடவுகண்டு கோபப்படு!

ஆணுக்குப் பெண் சமம்!

இதற்கான ஆக்கினைக்கு நாள் குறிக்கக் கோபப்படு!

கோபப்படு! கோபப்படு! பெண்ணே நீ கோபப்படு!

பாரதி : ஏய் ஏய் நிறுத்துங்க... கோபத்தெ... என்ன, ரொம்பச் சந்தோஷமாச் சொல்லிக்கிட்டிருக்கீங்க...

லெட்சுமி : கோபத்தையும் சந்தோஷமாச் சொல்லலாந்தானே!



பாரதி : ஆனா... இதுக்கு அடுத்து வர்ற வரியெல்லாம் கோபமா வருதே!

பாத்திமா : அக்கா! அதெ அப்புறமாப் பாக்கலாம்... இப்ப, சந்தோஷமாப் பாடலாம்...

பாரதி : ம்ம்ம்... சரி, பாப்போம்!

பாடல் : இந்தக் கோபம் என்பது அறச்சீற்றம்!

இதுவும் இல்லையெனில்

உனக்குக் கிடைக்கும் ஏமாற்றம்! ஆக, கோபப்படு! கோபப்படு!

பெண்ணே நீ கோபப்படு!

எதுவும் கூடிவரவில்லையெனில்

சாபமிடு! சாபமிடு! சாபமிடு! ஜெகமழியச் சாபமிடு!

பாரதி : அருமெ! நானே உணர்ச்சி வசப்பட்டுட்டேன்.. சரியாத்தான் இருக்கு. இதோட நிறுத்திக்குவோம்.. இல்லெ நீங்க எனக்குச் சாபம் போட்டாலும் போட்ருவீங்க... வெள்ளிக் கெழமெ நாடகம்... அன்னக்கிக் கௌப்பீறணும்... சரி... பாக்கலாம்...

*(எல்லோரும் வெளியேறுகின்றனர்.)*

## காட்சி 3 — நாடகம்

பாரதி : வருகை புரிந்திருக்கும் உங்க எல்லாருக்கும் பாரதியின் இனிய வணக்கம். நாடகம் பார்க்க வந்திருக்றெ உங்க எல்லாரையும் வரவேற்கிறேன். 'ரௌத்திரம் பழகு'ங்ற பேர்ல வீதி நாடகமாத்தான் ஒத்திகை பாத்துகிட்டுருந்தோம். திடீர்னு எங்களுக்கு ஒரு யோசனை!.... நமக்கான தொன்மத்லெயிருந்து ஒரு கருவை எடுத்து, அதை நாடகமாப் போட்டா எப்படின்னு தோணுச்சிது. தொன்மக் கருத்தை அதில் சொல்லலாம்னு பார்த்தப்ப, 'ரௌத்திரம் பழகு'ங்றத 'பெண் அம்போவான அம்பாவின் கதை'ய

பெண்ணின் அப்பா: சம்பந்தி அம்மா ஏதோ சொல்றாப்ல இருக்கு...

மா.அம்மா : ஒண்ணுமில்லெ... பையனுக்கு... அதென்னமோ ஆடியோ சீடியோ... என்னமோ ஒரு கார் இருக்காமில்ல... அதெத்தான் வாங்கணும்னு சொல்லிக்கிட்டே இருக்கான்... இந்தச் செலவோட செலவா அதையும் ஒண்ணு வாங்கிக் குடுத்திட்டா, ரெண்டு பேருக்கும் அது ஒபயோகமாயிருக்கும்லா...

*(எல்லோரும் அசைவற்றிருக்க, முன் மேடையின் இரண்டு கீழ்ப்பக்க ஓரங்களிலும், ஒரு பக்கம் மாட்டுத் தரகுக் காட்சியும், இன்னொரு பக்கம் ஏலம் போடும் காட்சியும் நடந்துகொண்டிருக்கிறது. நடுநடுவே மாப்பிள்ளை, பெண் வீட்டாரிடம் அசைவுகள் வரும்போது, கீழ்ப்பக்க ஓரங்களில் அசைவுகளற்றும் இறுதியில் ஒரே இரைச்சல் காடாக அந்த இடம் மாறவேண்டும்.)*

பாரதி : இவ்வளவு சத்தத்லெயும், பார்வையாளர்ட்ட நீங்க பேசுறது தெளிவாப் போய்ச் சேரணும்... எனக்கே சரியாக் கேக்க மாட்டேங்குது...பாக்கலாமா இன்னொரு தடவெ!

ப்ரியா : பாரதி! எனக்கு ஆறு மணிக்கு ஒரு கூட்டம் இருக்கு. போய்ட்டு வந்திரவா?

பாரதி : இல்லெ ப்ரியா!... ஒங் காட்சியை முடிச்சி ஒன்னைய அனுப்பிடுறேன்...

லட்சுமி : எனக்கும் ஒரு சின்ன வேலெ இருக்கு... இன்னைக்கு மட்டுந்தான், நாளைலயிருந்து...

பாரதி : சரி! சரி! எல்லாரும் சேந்துதானே இன்னைக்கின்னு முடிவு பண்ணுனோம்... அப்புறம் எப்படி வேறெ நிகழ்ச்சிகளை ஒத்துக்கிர்றீங்க...

இந்து : சீக்கிரம் முடிஞ்சிரும்னு நெனச்சோம்...

ஜெயப்ரியா : மொதல் நாளு அப்படி இப்படித்தான் ... ஏய்! நாளேலயிருந்து யாரும் வேற ... கூடாது...சரியா?

பாரதி : சரி... இப்ப, அந்த ஜீவா காட்சியை ... பாப்போம்!

*(காட்சி அலுவலமாக மாறுகிறது. ஜீவா ... பணியாற்றிக் கொண்டிருக்கிறாள். மற்ற... அலுவலகத்தின் வெவ்வேறு பகுதிகளில் ... கொண்டிருக்கின்றனர். அவளின் அதிகாரி ... அறிக்கையை எடுத்துக் கொண்டு உள்ளே நு...)*

அதிகாரி : ஜீவா!... ஒருவாரம்... நெனச்சா என்... செஞ்சி முடிக்கலாம்... நீ என்ன செஞ்சிருக்... இஸ் இட் எ ப்ராஜெக்ட்? வில் ... ஆஃப் தி கம்பெனி... சாரி ஜீவா!

*(திட்ட அறிக்கையை ஜீவாவின் மேசை... எறிந்துவிட்டு அதிகாரி அவரின் அ... நுழைகிறார். மற்றவர்கள் ஜீவாவைத் தேற்றி... ஜீவா அழுதுகொண்டிருக்கிறாள். நேரம் ஆ... ஒவ்வொருவராக விடைபெற்றுச் செல்கின்றனர். ... மேஜையில் தலைகுனிந்து அழுதுகொண்டிருக்... அதிகாரி அறைக் கதவைத் திறந்து வருகி... ஜீவாவைப் பார்க்கிறார்.)*

அதிகாரி : ஏய் ஜீவா! என்ன பண்ணிக்கிட்ருக்கெ? ஒய் ... சோ அப்செட்?... கூல்மா கூல்! லைஃப்ல... இப்படி அப்படித்தான்... அப்ஸ் அண்ட் டவு... வீ ஹேவ் டு மேக் இட் ஸ்மூத்... உண்மை... சொன்னா ஒம் ப்ராஜெக்ட் நல்லாவே வந்தி... ஆனா இந்த ஒலகம் எல்லாத்லெயும் லாப ... கணக்கெத்தான் பாக்குது லைஃப்ஸ் டுடேஸ் ... இஸ் சிம்ப்ளி யூஸ் அண்ட் த்ரோ அவ்வளவுதான் ... அது கூடத்தான் போயாகணும்... ப்ராஜெக்... மேலெ ரெக்கமெண்ட் பண்ண நாந்தானே ...

ஆகிடுச்சி! நாடகத்தெப் பாருங்க.. ஒங்கக் கருத்தெச் சொல்லுங்க.

கட்டியக்காரன்: வந்தான் இதென்ன பாருங்க... கட்டியக்காரன்
வாரான் இதென்ன பாருங்க... கட்டியக்காரன்
அம்பாவின் கதையைச் சொல்லத்தான்... நாடக
அடிபோட்டு வாரேன் இங்கெதான்!
வணக்கம்! வணக்கம்! வணக்கம்!

பார்வையாளர்கள் அனைவருக்கும் வணக்கம். 'விடியல்' குழுவினர் சார்பாக இன்று 'ரௌத்திரம் பழகு' என்கிற நாடகத்தை உங்கள் முன் நிகழ்த்த இருக்கிறோம். இதிலிருக்கிற சொற்குற்றம், பொருட் குற்றம், மேளக்குற்றம், தாளக் குற்றம் ஆகியவற்றைப் பொறுத்து, தாங்கள் பெற்ற பிள்ளைகள் தவறு செய்தால் எப்படிப் பொறுத்தருள்வீர்களோ அது போல் எங்களை ஆதரிக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

முந்தி முதலாக, காசிராஜ மகாராஜா சபைநாடி வருகின்ற விதம் காண்க!

காசிராஜன்: ராஜ மகராஜன் நான் வந்தேன்
ராஜாதி ராஜன் காசிமா நகரினையே
காவல் செய்யும் காசி மகராஜன் நான் வந்தேன்..
காசி மகராஜன் நான் வந்தேன்...
வந்து சபைக்கு, வந்தனங்கள் நான் தந்தேன்... தந்தேன்!
அடேகாவலா!

காவலன் : மகாராஜா!

காசிராஜன்: என்னுடைய அருமந்த புத்திரிகள், அவர்களுடைய பெயர்கள் எப்படியென்றால், அம்பா, அம்பிகா, அம்பாலிகா, அவர்கள் மூவருக்கும் மணம் முடிக்கும் காலம் வந்ததால், விவாகம் செய்துவைக்க வேண்டிய



பெரும்பொறுப்பு, பெற்றவனான எனக்கு இ... படியால், அவர்களுக்குச் சுயம்வரம் நடத்த... அவனி 56 தேசத்து அரசர்களையும் வரவ... அவர்களுக்கெல்லாம் அறிவிக்கை அ... ருந்தேனே... அவர்களெல்லாம் வந்துவி...

காவலன் : வந்துட்டாங்க மகாராசா. ஆனா அந்த அ... புரத்து நாற்காலி மட்டும் காலியாக் கெ... மகாராசா! இன்னொன்னு, வந்திருக்ற எல்லா தே... ராஜாக்களும் இன்னக்கித்தான் அழுக்கு தேய்ச்சி... சிருப்பாங்க போலயிருக்கு... பக்கத்லெ போனா... சியக்கா வாடெ! ஒங்க ஒடம்புலெயும் அதே வ... தான் மகராஜா!

காசிராஜன்: இருக்கட்டும். ஆனால் என்னுடைய அன்பு... அம்பா, சௌபால தேசத்து ராஜாவான சால்வ... பிரீதி மிகக் கொண்டிருப்பதாய்ச் சொன்ன... அந்தச் சௌபால தேசத்து ராஜா சா... வந்திருக்கிறாரா?

காவலன் : முன்வாசக் கதவெத் தெறந்ததும், அவர் ... மகாராஜா மொதல்ல வந்து, உள்ளெ ஒக்காந்தா...

காசிராஜன்: சரி... அப்படியானால் என்னுடைய அரு... புத்திரிகளைச் சுயம்வர மண்டபத்திற்கு அழைத்... ஏற்பாடு செய்யுங்கள்!

காவலன் : சரி, மகாராஜா!

*(மூன்று பெண்களும் ஒவ்வொருவராக அழை... வரப்படுகின்றனர்.)*

காசிராஜன்: என்னுடைய அழைப்பை ஏற்று சுயம்வரத்தி... வந்திருக்கிற எல்லா தேசத்து அரசர்களுக்கும்... மாநகரைப் பரிபாலனம் செய்துவரும் காசிராஜ... நான் வணக்கம் தெரிவித்துக் கொள்கிறேன். மு... என்னுடைய மூத்தமகள் அம்பா, தனக்... மணாளனைத் தானே தேர்ந்தெடுப்பாள். *(அ... மணியை அடிக்கிறார்)* நடக்கட்டும் சுயம்வர...